**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**D.V.C. 23 of 2022**

**Deposition of Witness P. W.**

| | |
|---|---|
| **Name : பிரைந்தி** | **Father/Husband's Name: நிஷாந்த்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 06.05.2024**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் தற்போது பழனியில் உள்ள எனது பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறேன். 1ம் எதிர் மனுதாரர் எனது கணவர் ஆவார். நான் எனது கணவருக்கெதிராக ஜீவனாம்சம், இழப்பீடு ஆகியவை கோரியும் மேலும் எனது மகளை என் வசம் ஒப்படைக்க கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன். நான் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள 10.02.2016ம் தேதியிட்ட – எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையில் ஏற்பட்ட திருமண அழைப்பிதழ் அசல் ம.சா.ஆ.1 ஆகவும், 27.10.2016ம் தேதியிட்ட எனது மகள் நித்தினாவின் பிறப்பு சான்றிதழ் நகல் (அசல் சான்றிதழுடன் ஒப்பு நோக்கப்பட்டது )ம.சா.ஆ.2 ஆகவும், 25.05.2006ம் தேதியிட்ட எனது குடும்பத்தினரின் வகையறா பெயரில் உள்ள குடும்ப அட்டை நகல் ம.சா.ஆ.3 ஆகவும், எனது பெயர் நீக்கப்பட்ட குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பு நோக்கப்பட்டது) ம.சா.ஆ.4 ஆகவும், புகைப்படங்கள் ம.சா.ஆ.5 ஆகவும், 14.05.2022 ம் தேதியிட்ட நான் கடலூரில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் பேரில் பதிவு செய்யப்பட்ட CSR 7 மனு இரசீது நகல் ம.சா.ஆ.6 ஆகவும், 18.05.2022ம் தேதியிட்ட நான் எதிர் மனுதாரர்கள் மீது பழனியில் இருக்கும் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் ம.சா.ஆ.7 ஆகவும், 30.05.2022ம் தேதியிட்ட மேற்படி HMOP.No.304/2020ல் நான் தாக்கல் செய்த**

கவண்ட்டர் ஸ்டேட்மெண்டும், ஒரு தலைப்பட்ச உத்திரவை ரத்து செய்து கொள்ள கொடுத்த அபிடவிட்டும் மனுவின் நகல் ம.சா.ஆ.8 ஆகவும், 06.06.2022ம் தேதியிட்ட – பழனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த CSR ரசீது ம.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யபடுகிறது. நான் மனுவில் கோரியுள்ள பரிகாரங்களை எனக்கு வழங்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**எதிர் மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை** :

கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கின் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.05.17 11:04:51 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி